தஞ்சை



V21193 N51
N56
108141

ஐந்தாண்டின் சாதனைகள்

தஞ்சை மாவட்டம்

(1951–56)

MADRAS RECORD OFFICE
23 OCT 1956
MADRAS

ஐந்தாண்டின் சாதனைகள்

முதற் பதிப்பு: செப்டம்பர் 1956.

விலை அணா : 4

சென்னை அரசாங்க செய்தி விளம்பரத்துறை
வெளியீடு.

ஸ்ரீ ஸ்ரீபிரகாசா
சென்னை மாநில கவர்னர்

திரு காமராஜ்
முதலமைச்சர்

திரு எம். பக்தவத்ஸலம்

திரு ஏ. பி. ஷெட்டி

திரு S.S. ராமசாமி படையாச்சி

திரு சி. சுப்ரமண்யம்

திரு சண்முக ராஜேஸ்வர சேதுபதி

திரு M.A. மாணிக்கவேலு


திரு பி. பரமேஸ்வரன்

நூல் முகம்

வானத்திலே வட்டமிட்டுத் திரியும் வண்ணப்பறவைகளும் காட்டிலே கவலையற்று வாழும்விலங்குகளும், “நாளை என்ன?” என்பதையே நினையாது வாழ்பவை. இன்று என்ன? என்பதுதான் அவைகளின் முதல் எண்ணம். ஆனால் மனிதன் அவ்வாறு வாழமுடியாது. அவ்வாறு வாழ நினைப்பதும் அறிவுடைமையாகாது.

இன்றைய நாளையும், வரப்போகும் நாளையும் எண்ணி அதற்கேற்ப வாழ்வை வகுப்பதில்தான் மனிதனின் உயர்வும், அமைதியும், பண்பும் விளங்குகின்றன. அப்போதுதான் அவன் கழிந்த நாட்களுக்காகக் கழிவிரக்கம்கொள்ளாமல் அமைதியான வாழ்க்கையை வாழமுடியும். இதனை நம் முன்னோர்கள் நமக்கு நன்கு வலியுறுத்திக் காட்டியுள்ளனர்.

துன்பம் வருவதற்கு முன்னர் அதனை அறிந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளாதவனின் வாழ்வு, எரிகின்ற தீயின் முன்னே இடப்பட்ட வைக்கோல் போரைப்போன்று அழிந்துபோய்விடும் என்னும் பொருளுடன், வள்ளுவரும்

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

என்று கூறியுள்ளார்.

வள்ளுவன் வகுத்த அறநெறியிலே நிகழ்காலத்தையும், வருங்காலத்தையும் எண்ணி, நாடு முழுவதும் நலம் பெறும் வகையில் முதல் ஐந்து ஆண்டுத் திட்டம் நம் அரசாங்கத்தால் தீட்டப் பெற்றது.

1951-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தொடங்கப்பட்ட இத் திட்டம் 1956-ம் ஆண்டு மார்ச் மாதத்தோடு முடிவடைந்தது. இத் திட்டத்தில் குறிப்பிட்டிருந்த எல்லாப் பணிகளையும் நாம் குறிப்பிட்டிருந்த காலவரையறைக்கு முன்பே முடித்துவிட்டோம். மக்களின் ஒன்றுபட்ட ஒத்துழைப்பினாலும், அரசாங்க ஊழியர்களின் ஆர்வத்தாலுமே நாம் இத் திட்டத்தை வெற்றிகரமான முறையில் சாதிக்க முடிந்தது.

இத் திட்டத்தின் தொடக்க காலத்தில் நம் மாநிலத்திற்குக் கிடைத்த மொத்த தொகை 86·43 கோடி ரூபாயாகும்.

தனித்தனியே ஒவ்வொரு துறைக்கும் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆகிய செலவின் விவரத்தைச் சுருக்கமாகக் கீழே காணலாம்.

சென்னை மாநிலம்

முதல் ஐந்தாண்டுத் திட்டம்
(1951 எப்ரல் முதல் 1956 மார்ச் முடிய)

ஒதுக்கப்பட்ட தொகை சுமார் ரூ. 86 கோடி.

செலவாகிய தொகை சுமார் ரூ. 84 கோடி.

துறைகள்	ஒதுக்கப்பட்டது (லட்சத்தில்) ரூ.	செலவானது (லட்சத்தில்) ரூ.
வேளாண்மை	902	857
கால்நடை வளர்ச்சி	56	43
பால் பெருக்கம்	13	16
காடுகள்	75	29
கூட்டுறவு	17	11
மீன் துறை	49	35
கிராம வளர்ச்சி	30	77

துறைகள்	ஒதுக்கப்பட்டது (லட்சத்தில்) ரூ.	செலவானது (லட்சத்தில்) ரூ.
நீர்ப்பாசனம்	2,019	2,086
மின்சாரம்	3,086	3,068
குடிசைத் தொழில்கள்	44	52
ஏனைய தொழில்கள்	128	113
பாதைகள்	358	297
கல்வி	494	406
மருத்துவம்	248	248
சுகாதாரம்	518	475
மனையிடம்	190	152
பின்தங்கிய வகுப்புக்கள்	416	440
மொத்தம்	8,643	8,414

நீர்ப் பாசனத்திற்கும் மின்சாரத்திற்கும் மட்டும் நூற்றுக்கு அறுபது ரூபாய் மேனியில் செலவழித்துள்ளோம், இதன் பயனாய் நாலு லட்சம் ஏக்கருக்கு இப்போது நீர் பாய்கிறது. பல கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கி அவைகளை ஒளியுடைய ஊர்களாக்கி உள்ளோம். மற்ற மாநில அரசாங்கங்களைவிட இத்துறையில் நமது சாதனை மிகவும் பெருமைப் படக்கூடிய முறையிலே உள்ளது.

முதல் திட்டத்தோடு நம்முடைய லட்சியங்கள் நிறைவெய்தவில்லை. நாட்டிலே இன்னும் உணவுக்குறைவும், தொழிலிலே பிற்போக்கும், மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டமும் நிலவிவருகின்றன. இவை அனைத்தும் நீங்கினால் ஒழிய நாடு நலம் பெற்றுவிட்டது என்று கூறமுடியாது. மக்களின் வாழ்வும் மேனிலை எய்திவிட்டதாக அமைதி அடையமுடியாது.

இவை அனைத்தையும் போக்குவதற்குத்தான் முதல் ஐந்து ஆண்டுத் திட்டம் முடிந்தஉடனே, இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டம் தொடங்க பெற்றுள்ளது. இத் திட்டத்தால் நாடு பெரும் அளவுக்கு வளமடையும். பெரிய பெரிய தொழில்கள் தொடங்கப் பெறும். மக்களின் ஏழ்மையும், வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழியும். பஞ்சமும், பிணியும், துன்பமும், துயரமும் அடியோடு அழியும்.

இப் பெரும் திட்டங்கள் அனைத்தும் நிறைவேற மக்கள் அனைவரும் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பார்களாக! அரசாங்கம் வேறு, மக்கள் வேறு என்று யாரும் எண்ணக்கூடாது. மக்களின்

நல்வாழ்வே அரசாங்கத்தின் இனிய வாழ்வு. அரசாங்கத்தின் பயனே மக்களின் பயன். மக்களின் அரசாங்கம் தழைக்க மக்கள் அனைவரும் ஒத்துழைப் பார்களாக!

வளமார் தஞ்சை

"கோல்நிலை திரிந்து,
கோடை நீடினும் தானிலை திரியாத்
தண்டமிழ்ப் பாவை" என்று
சான்றோர்களால் புகழ்ந்து பாடப்
பட்ட ஆறு காவிரி ஆறு. பொய்யாத
அந்தப் பொன்னி நதியின் புனல்,
சோழ வளநாடு எங்ஙனும் பரந்து
பாய்வதால் தஞ்சை மாவட்டம் பொன்
கொழிக்கும் புனல் நாடு என்று
போற்றப்பட்டது.

காவிரியின் வெள்ளத்தால், எங்கு
நோக்கினும் பச்சைப் பசேல் என்ற
நெற்பயிர்கள். அவைகளின் இடையே
வெள்ளி ஆறு போல் ஓடும் சிறு சிறு
வாய்க்கால்கள். வானமங்கை தன்
வடிவழகைக் காண்பதற்காக வைத்
திருக்கும் பான்மையென மின்னும்
சிறுசிறு குளங்கள். அக்குளங்களிலே

பன் மணிகள் பூத்துக் குலுங்குவது போல் பலவகை மலர்கள். இவ்வண்ணம் தஞ்சை மாவட்டமெங்கும் கண்ணிற்கினிய எண்ணற்ற காட்சிகளைக் காணலாம்.

* * * * *

அந்தி மாலையும் மறைந்து நீண்ட நேரமாகிவிட்டது. வானத்திலே அணி நிலா தோன்றி அங்கண்மாஞாலத்தை அழகுபடுத்திக்கொண்டிருந்தான். அவ்வேளையில் இரண்டு வெண்ணிற அன்னங்கள் பன்மலர் நிறைந்த ஓர் அழகுக் குளத்தில் களிப்புடன் விளையாடிக்கொண்டிருந்தன. நீண்டிருந்த ஒரு தாமரை இலைக்குப் பின்னால் எவ்வாறோ ஆண் அன்னம் மறைந்துவிட்டது. அதனை அறியாத பேதை அன்னமோ பெரிதும் மனங் கலங்கித் தன் துணையைத் தேடியது. அப்போது வானிலே வட்டமிட்ட வண்ண நிலாவின் நிழலை அப் பெண் அன்னம் கண்டது. மயக்கத்தால் அதுவே தன் இன்னுயிர்த் துணை அன்னம் என எண்ணி அதை அணைய ஓடியது. அதே வேளையில் தாமரை இலையால் மறைக்கப்பட்ட செங்கால் அன்னமும் தன் பெடையை நோக்கி வந்தது.

அதைக் கண்ட பெண் அன்னம், தன் மடமையை எண்ணி மிகவும் நாணி மலர்களிடை மறைந்து விட்டதாம்.

இவ்வாறு வளமார்ந்த காட்சிகள் நிறைந்த நாடு சோழ நாடு.

இந் நாட்டில் வாழும் மக்கள் எல்லோரும் எல்லாச் செல்வமும் எய்தி வாழ்ந்தனர். பொன்னேயும் ஒரு பொருளென மதியாது இறுமாந்து வாழ்க்கை நடத்தினர்.

உலர்ந்த நெல்லைத் தின்ன வரும் கோழிகளை, பெண்கள் தங்கள் காதிலே அணிந்துள்ள பொற்குழை யால் எறிந்து விரட்டுவார்களாம். உப்பு வாணிகர் நெற்பயிரிலே தங் களின் ஓடத்தைக் கட்டுவார்களாம். அறச் சாலைகளிலே சோறு ஆக்கிய கொழுங் கஞ்சி தெருவிலே ஆறு போலப் பரந்து செல்லுமாம்.

இவ்வாறெல்லாம் பண்டைக் காலத் தில் அவ் வளநாடு இருந்ததாக நம் இலக்கியங்கள் இயம்புகின்றன. ஆனால், இன்றோ நிலைமை முற்றிலும் வேறாக உள்ளது. “வான் பொய்ப் பினும் தான் பொய்யாக் காவிரி”

என்பது பொய்த்துப்போய் விட்டது. வானமழை இல்லாது பயிர்கள் வாடி விட்டன. வாழ்க்கைக்குரிய வசதிகள் இல்லாது ஏழை உழவர்கள் தேம்பி நிற்கின்றனர். புயலின் கொடுமைக்கு இரையாகிக் கொடுப்பவர் எவரும் இல்லையோ ? என எளியவர் ஏங்கி வாடுகின்றனர்.

இவ்வண்ணம் மக்கள் படும் துயரத்தைக் கண்ட அரசாங்கம் அவர்களை நன்னிலைப் படுத்த, பற்பல பணிகளை மேற்கொண்டது. அவைகளின் விளைவால் எண்ணற்ற அரும் பயன்கள் ஏற்பட்டன.

பயிர்களின் வாட்டந் தீர்க்கப் பல வாய்க்கால்கள் வெட்டப்பட்டன. நீரைத் தேக்கி நிறுத்த நீண்ட அணைகள் பல கட்டப் பட்டன. வேளாண்மையிலே புதிய புதிய முறைகளைக் கையாண்டு, நிலத்தை மேன் மேலும் செழிக்கச் செய்வதற்கான ஆராய்ச்சி நிலையங்கள் பல அமைக்கப்பட்டன. ஜப்பானியச் சாகுபடி முறையால் விளைச்சலைப் பன்மடங்கு பெருக்க வழி துறைகள் கோலப்பட்டன. தஞ்சை மாவட்டம், தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமாய் விளங்குவதற்கான

வழிகள் அனைத்தையும் அரசாங்கம் இப்போது மேற்கொண்டு பணியாற்றி வருகிறது.

வேளாண்மையுடன், தொழிலும் பெருகினால்தான் மக்களின் வாழ்க்கைத்தரமும் உயரும் என்பதை மனதிற் கொண்டு இம் மாவட்டத்திலே அதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

வாழ்க்கையின் எல்லாத் துறையிலும் மக்கள் மேனிலை பெற்று விளங்க வேண்டுமென்பதற்காகக் கடந்த ஐந்து ஆண்டு காலத்திற்குள் பற்பல காரியங்கள் செய்யப்பட்டன. அவைகள் அனைத்தையும் மக்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும் என்னும் நோக்கத்துடன்தான் இந்த நூல் வெளியிடப்படுகிறது. 'அரசாங்கம் அனைத்தையும் சாதித்து விட்டது, இனி எவ்வகையான சிக்கலும் இல்லை;' என்று பெருமைப் படுத்திக்கொள்ளும் முறையிலே இந் நூல் வெளிவரவில்லை. செய்த காரியங்கள் சிலதான். இனிமேல் செய்யப்போகும் செயல்களோ அளவற்றன.

தஞ்சை மாவட்டம் என்றுமே பொன் நாடாய்—புனல் நாடாய்—மற்றவருக்குத் தஞ்சம் கொடுக்கும் வள நாடாய்—பஞ்சமும் நோயும், அணுகாத திருநாடாய்; என்றும் குறையாத மாண்புடன் திகழும் வகையில் அரசாங்கம் இனியும் ஓய்வு ஒழிவின்றி ஆவன செய்யும். அப் பெரும் பணியில் மக்கள் அனைவரும் தங்களின் ஒத்துழைப்பைத் தந்து வெற்றியும் புகழும் அடைவார்களாக!

நீர் . . .
பெருக!



" தாதுகு சோலை தோறும் சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணத் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தோறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாயதன்றே "

—கம்ப ராமாயணம், பால காண்டம், ஆற்றுப் படலம் 20.

நீர் . . .

பெருக !

உடலுக்கு ரத்தம் இன்றியமையாது வேண்டுவதுபோல உழவுக்கு நீர்ப்பாசன வசதிகள் வேண்டும். நாடு செழித்து நல்வளம் கொழிக்க வேண்டுமானால் நீர்நிலைகளைப் பெருக்கவேண்டும். பண்டுதொட்டே நம் நாட்டை ஆண்ட அரசர்கள் நீர்நிலைகளின் அவசியத்தை உணர்ந்து ஆறுகள் பல வகுத்துள்ளனர். காவிரி ஆறு பெருக்கெடுத்து கரைகளை உடைத்துக்கொண்டு ஓடியபோது ஆற்றின் இருமருங்கும் உயரமான கரையெடுத்து ஊர்கள் பாழாகாமல் தடுத்துள்ளான் கரிகாற் சோழன்.

நமது நாளிலே காவிரி அன்னை தஞ்சை மாவட்ட மக்களுக்கு அருள்புரிந்து வரும் முறையை யாவரும் நன்கு அறிவர். நிலமகள் அழகிய அணிகளை அணிந்து கொண்டாற்போல் காவிரியும் அதன் கிளை ஆறுகளும் தஞ்சை மாவட்டத்திலே பாய்கின்றன. 1934-ம் ஆண்டில் கட்டப்பட்ட மேட்டூர் அணையிலே நீர் தேக்கி வைக்கப்பெற்று ஆண்டுதோறும் அளவாக விடப்படுகிறது. பருவ மழை சில நேரங்களிலே

பொய்த்துவிட்டது. எனினும் அதையும் அரசாங்கம் சமாளித்து சாகுபடிக்குத் தக்கசமயத்தில் அணையைத் திறந்து வந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஆனி மாத இறுதியிலே காவிரி அமிழ்தம் தஞ்சை மாவட்ட மக்களுக்கு கிடைத்து வருகிறது.

கடந்த ஐந்தாண்டுகளிலே காவிரி ஆற்றின் நீரை உழவுக்குப் பயன்படுத்த அரசாங்கம் ஆற்றிய சாதனைகளைக் காணலாம்.

பாய்கால் வடிகால் முறைகளை நடத்தி வருவதற்கும், ஆறுகள் கால்வாய்களைப் பாதுகாத்துச் சீர் செய்வதற்கும் தஞ்சை மாவட்டத்தில் காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் என்ற மூன்று ஆற்றுப் பெரும் பிரிவுகள் உள்ளன. இனி அவற்றை ஒவ்வொன்றுகக் காண்போம்.

காவிரிப் பிரிவு

இந்த நீர்ப்பாசனப் பிரிவு காவிரி படுகைப் பகுதி, கீழ்க் கொள்ளிடம் அணைக்கட்டுப் பகுதி ஆகிய நிலப்பரப்புகளில் பாய்கால் வடிகால் வசதிகளைக் கண்காணித்து வருகிறது. மாயூரம், சீர்காழி, நன்னிலம் வட்டங்களில் (Taluk) சரியான வடிகால் வசதியின்மையால் பல ஆயிரக் கணக்கான நிலங்கள் சரியானபடி சாகுபடிசெய்ய முடியாமலிருந்தன. இவற்றிற்கு வடிகால் வசதியளிக்கப் பன்னிரண்டு பெரிய வடிகால் திட்டங்கள் 34·84 லட்சம் ரூபாய் மதிப்பில் இந்த முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு முடிக்கப் பெற்றன. மிகவும் எதிர்பார்க்கப்பட்டு முடிக்கப்பட்ட முக்கிய தோர் ஆக்க வேலையாகும் இத் திட்டம். இப்பன்னிரண்டு திட்டங்களில் முதல் எட்டு திட்டங்கள் காவிரி பிரிவைச் சார்ந்தன. இதன் பயனாக அழிஞ்சியார், கழுதை வாய்க் கால், நல்லூர் உப்பனார், கிட்டியணை உப்பனார், மன்னியரார்,

தண்டலார் முதலிய வடிகால்கள் ஆழப்படுத்தப்பெற்று கரைகள் போடப்பெற்றதன் மூலம் வளர்ச்சியடைந்துள்ளன. சுமார் 15,715 ஏக்கர் நிலங்கள் இத் திட்டத்தினால் நல்ல வடிகால் வசதிபெற்று வெள்ளச் சேதமின்றி பாதுகாக்கப்பெற்று, நல்ல நீர்ப்பாசன வசதியைப் பெற்றுள்ளன. இதற்காக 17·8 லட்ச ரூபாய் செலவாகியுள்ளது. ஆண்டுதோறும் 1,570 டன் அரிசி மிகுதியாகக் கிடைக்கும். 1942–43 ஆண்டுகளில் உணவுப் பெருக்கத் திட்டம் உருவாகியது. தரிசாகக் கிடந்த நிலங்கள் விளைச்சல் நிலமாக்கப்பட்டன. அவ் வகையில் சுமார் 8882 ஏக்கர் புஞ்சை நிலங்கள் நல்ல விளைச்சல் நிலங்களாக ஆக்கப்பட்டன. இதற்காக 4·58 லட்ச ரூபாய் செலவாகியுள்ளது. இதனால் 880 டன் அரிசி மிகுதியாகக் கிடைக்கிறது. மற்றுமொரு சிறந்த சாதனை யாதெனின் உழவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 19,919 ஏக்கர் நிலங்கள் புதிதாக சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டதேயாகும். இதற்காகச் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 2·07 லட்சமாகும். 1,572 டன் உணவுப் பொருள் மிகுதியாகக் கிடைக்க இத் திட்டம் வழி கோலியுள்ளது.

வெண்ணாற்றுப் பிரிவு

இந்தப் பிரிவு வெண்ணாற்றுப் பகுதி நிலங்களுக்குப் பாய்கால் வடிகால் வசதிகளைக் கண்காணித்தும், தன் பொறுப்பில் உள்ள ஆறுகள் வாய்க்கால்களைச் சீர்செய்தும் பாதுகாத்தும் வருகிறது. உணவுப் பெருக்கத் திட்டத்தின்கீழ் இப்பிரிவில் ரூ. 2,18,181 செலவில் நான்கு வேலைகள் செய்து முடிக்கப்பெற்றன. இதனால் 46 ஏக்கர் பழைய நஞ்சையும், 2,562 ஏக்கர் புது நஞ்சையும் சாகுபடிக்குக் கொண்டு வரப் பெற்றன. இதனால் 432 டன் உணவுப் பொருள் கிடைக்கும். அதிக உணவுப் பொருள் சாகுபடி திட்டத்தின் கீழ் ஐந்து வேலைகள் ரூ. 45,328 செலவில் செய்து முடிக்கப்பெற்றன.

இதனுல் 633 டன் உணவுப் பொருள் மிகுதியாகக் கிடைக்கும். வெள்ளக்காலங்களிலும் மழைக் காலங்களிலும் கடல் ஓரத்தி நிலங்கள் பாழடைந்து கொண்டிருந்தன. அவைகளுக்கு வடிகால் வசதி கிடைப்பதற்காக முயற்சிகள் செய்யப்பெற்று ரூ. 1,11,248 செலவில் வடிகால்கள் வெட்டப்பெற்றன. விசேஷ சிறிய நீர்ப்பாசனத் திட்டம் ஒன்று வகுக்கப்பெற்றுள்ளது. அந்தத் திட்டப்படி ரூ. 3,91·075 செலவில் பத்து வேலைகள் முடிக்கப்பெற்றுள்ளன. ரூ. 1,24,604 செலவில் நான்கு வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டும் உள்ளன. இத் திட்டங்களினுல் 7,493 ஏக்கர் பழைய நஞ்சை நிலங்களுக்கு நிலைத்த நீர்ப்பாசன வசதி கிடைப்பதுடன் 512 ஏக்கர் நிலங்கள் புதிதாக நஞ்சை சாகுபடிக்கும் கொண்டுவரப்படும். 1952–53 ஆண்டுகளில் இப்பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட சில வளர்ச்சித் திட்டங்களைக் காணலாம் :—

	ரூபாய்கள்.
சீரா வட்டனூரிலிருந்து ஒரு புதிய வாய்க்கால்	1,133
காவிரி படுகை வடிகால் திட்டம்	18,196
முள்ளியாறு கடைக்கோடி திட்டங்கள் ..	1,56,238
முள்ளியாறு இயந்திர இறவைப் பாசனத்திட்டம்.	20,108
பாமணி தெற்கு ராஜன் வாய்க்கால் மின்சார இறவைப் பாசனத் திட்டம்	1,492
மன்னார்குடி வட்டம் குடிதாங்கிச்சேரி முதலான கிராமங்களுக்குப் பாசனத் திட்டம் ..	7,525
முள்ளியாற்றங்கரை 1/5 மைல் கல்லில் கட்டப்படும் பாலம்	4,950
மற்ற ஆறுகள் வாய்க்கால்கள் செப்பனிடப்பட்டது	6,92,760

இனி செய்யவிருக்கும் முக்கியமான ஒரு சில திட்டங்களைக் காணலாம் :—

1. அடப்பார் 2, 3-வது பகுதிகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும், ஹரிச்சந்திரா நதிக்குக் குறுக்கே அணைகட்டுவதற்காகவும் ரூ. 1,63,540 செலவில் ஒரு திட்டம் தீட்டப்பெற்றுள்ளது. இதனால் 232 டன் உணவுப் பொருள் விளைவிக்கப் பெறும். வேலை விரைவாக நடந்து வருகிறது.

2. கந்தப்பரிச்சனுரை சீர்ப்படுத்தி வடிகால் சீர் செய்யும் பொருட்டு ரூ. 5,63,000 செலவில் ஒரு திட்டம் வகுக்கப் பெற்றுள்ளது. இதனால் 2,372 ஏக்கர் நிலங்கள் தண்ணீரில் மூழ்கி பாழ்படுதல் தவிர்க்கப்பட்டது.

3. திருத்துறைப்பூண்டி வட்டம் தென் நடாரில் நீர்ப் பாசனக் குழாய்கள் அமைப்பதற்கு ரூ. 2,07,230 செலவில் ஒரு திட்டம் உறுவாகிறது. இதனால் 1,040 ஏக்கர் நிலம் புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டு வரப்படுவதுடன் 231 டன் உணவுப் பொருள் மிகுதியாகவும் உற்பத்தி செய்யப்படும்.

இது தவிர வேறொரு சிறந்த ஆக்கவேலை உருவாகிக் கொண்டிருக்கிறது. அது யாதெனின் நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி வட்டங்களில் ஓடும் வியாபாரப் படகுகள் செல்லும் வேதாரண்யம் கால்வாயை ஏழு லட்ச ரூபாய் செலவில் அதிக ஆழப்படுத்தி போக்குவரத்து சாதனத்தைப் பெருக்குவதேயாகும். இந்தத் திட்டத்திற்காக 1956–57 வரவு செலவுத் திட்டத்தில் இரண்டு லட்ச ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.

கல்லணைக் கால்வாய்ப் பிரிவு

இந்தப் பிரிவு கல்லணைக் கால்வாய், வெண்ணாற்றிலிருந்து பிரியும் வடவாறு, அதன் கிளை ஆறுகள் இவைகள் பாயும் நிலங்களுக்குப் பாய்கால் வடிகால் முறைகளைக் கண்காணிப்ப

தோடு நிலங்களைப் புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டுவரும் வேலையையும் கவனித்து வருகிறது. இந்தப் பிரிவில் செய்யப் பட்ட வேலைகளைக் காணலாம் :—

1. புதுக்கோட்டைப் பகுதியில் சில பாகங்களிலும், பட்டுக் கோட்டை வட்டத்தில் சில பகுதிகளிலும் வாழ்வோருக்கு நன்மைகள் செய்யும்பொருட்டு, கல்லணைக் கால்வாயிலிருந்து ஓலவயல் வாய்க்கால் விஸ்தரிப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இக்கால்வாயினால் 6,300 எக்கர் நிலங்கள் நீர்ப்பாசன வசதியைப் பெறும். திட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது. சென்னை மாநில பொது மராமத்துத்துறை அமைச்சர் அவர்கள் 1951-ம் ஆண்டு செப்டெம்பர் மீ 28உ யன்று இதனைத் திறந்து வைத்தார்கள். இத் திட்டத்தின் பயனாக இதுபோது 4,000 எக்கர் நிலங்கள் சாகுபடிக்கு வந்துவிட்டன. திட்டத்திற்குச் செலவான தொகை பத்து லட்ச ரூபாயாகும்.

2. பாபநாசம் வட்டம் வடபாதி கிராமத்தில் சுமார் ஐந்நூறு எக்கர் நிலங்கள் நீரில் மூழ்குவதைத் தடுக்க ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. ரூ. 52,000 செல்வில் பீமனோடை வடிகால் ஆழப்படுத்தப்பட்டதுடன் அகலப்படுத்தவும்பட்டது. 1951–ல் உருவான அத் திட்டம் அண்மையில் முடிவுற்றது.

3. மன்னார்குடி வட்டம் மேலவாசல், ஆண்டிக்குளம் கிரா மங்களில் புதிதாக 235 எக்கர் நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வரவேண்டி ரூ. 12,000 செலவில் ஒரு நீர்ப்பாசனத் திட்டம் உருவாக்கப்பட்டு நல்ல முறையிலே நிறைவேற்றப் பட்டுள்ளது.

4. பட்டுக்கோட்டை வட்டம் களியாகுறிச்சி பெரியகோட்டை எல்லையில் ஓடும் கன்னாற்று வெள்ளத்தினால், ஒவ்வோர் ஆண்டும் 761 எக்கர் நிலம் நீரில் மூழ்கி பாழ்ப்பட்டு வந்தது. இதனைத் தடுக்க அவ்வாற்றிற்கு இரண்டு மைல் நீளத்திற்கு

ரூ. 21,660 செலவில் கரை போடப்பட்டது. இதனால் மேலும், ஒரு நன்மை கிட்டியது. அப்பகுதியில் 90 எக்கர் நிலத்தைப் புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டுவர முடிந்தது.

5. பட்டுக்கோட்டை வட்டம் அரசேரி எரியிலிருந்து கேணிக் குளம் வரை அரசேரி வடிகாலைச் சீர்திருத்தம் செய்யும் வேலை தொடங்கப்பெற்று சுமார் ரூ. 21,000 செலவில் முடிக் கப்பெற்றது. இதனால் 170 எக்கர் நிலங்கள் நீரில் மூழ்கு வது தடுக்கப்பட்டதோடு எண்பது எக்கர் நிலம் புதிதாகச் சாகு படிக்குக் கொண்டுவரவும் பெற்றது.

இவற்றைத் தவிர சிறு அளவில் செய்யப்பட்டுவரும் சிறப்பு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் பல வேலைகள் இவ்வைந் தாண்டுக் காலத்தில் செய்யப்பட்டுள்ளன:—

1. பாபநாசம் வட்டம் நல்ல வன்னியன் குடிகாட்டில் பரவை எரியின் உள்வாயில் சுமார் இருநூறு எக்கர் நிலம் ரூ. 60,000 செலவில் புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

2. கல்லணைக் கால்வாய் தலைப்பில் அடப்பம் பள்ளத்தில் சுமார் 366 எக்கர் நிலங்கள் ஒவ்வோர் ஆண்டும் நீரில் மூழ்கி விடும். இதனைத் தடுக்க ரூ. 42,000 செலவில் கல்லணைக் கால்வாய்க்குக் குறுக்கே ஒரு கீழ்க்குமிழி கட்டப்பட்டது.

3. பட்டுக்கோட்டை வட்டம் நெடுவாசலில் ஒரு வடிகால் வெட்டி 307 எக்கர் நிலங்களைப் புதிதாக நஞ்சை சாகுபடிக்குக் கொண்டு வரப்பெற்றது.

4. பட்டுக்கோட்டை வட்டம் பாட்டுவனாச்சி வடிகால் பாசன வளர்ச்சித் திட்டம் ரூ. 7,42,000 செலவில் முடிக்க 1954-ம் ஆண்டு செப்டெம்பர் மீ 14உ-ல் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டது. இத் திட்டத்தின் பயனாக வடிகால் வசதி செய்யப்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் நீரில் மூழ்கும் 800 எக்கர் நிலங்கள் பாதுகாக்கப்பெற்றன. கடற்கரைக்கு அண்மையிலுள்ள 880

ஏக்கர் நிலங்கள் வடிகால் நீரைக்கொண்டு சாகுபடி செய்வதற்கான வசதிகளைப்பெற்றன. இதனை 1955-ம் ஆண்டு பிப்ரவரிமீ 17உ யன்று சென்னை மாநில முதலமைச்சர் உயர்திரு. காமராஜ் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

5. பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, அறந்தாங்கி வட்டங்களில் ஜமீன் இனும் கிராமங்களில் உள்ள சுமார் 580 ஏரிகள் ஜமீன் ஒழிப்புச் சட்டத்திற்குப் பிறகு அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பெற்றன. பல ஆண்டுகளாக அவ்வேரிகள் கவனிக்கப்படாமல் மிகவும் சீர்கேடான நிலையில் இருந்ததால் அவற்றைச் செப்பனிடவேண்டி ரூ. 10,20,879 செலவில் வேலை தொடங்கப்பெற்று விரைவாக நடந்துவருகிறது.

6. பட்டுக்கோட்டை வட்டம் ஏர்ப்புரக்கரையிலுள்ள பெரிய ஏரியின் கீழ் 582 ஏக்கர் நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்பெற்றுள்ளன. அவ்வேரிப் பாய்ச்சலுக்கு ஆதாரமான ராஜா மடம் வாய்க்கால் கடைமடையில் உள்ளதால் ஏரிக்கு சிறிதளவே தண்ணீர் பாய்ந்து வந்தது. ஏரிக்கு அருகில் ஓடும் மகாராஜ சமுத்திரம் ஆற்றில் தொக்கலிக்காடு ஊர் எல்லையில் ஓர் அணைக்கட்டி, ஆற்றில் வீணுகும் நீரை ஏரியில் நிரப்புவதற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. ஆற்று நீரை வாத்தலை வாய்க்கால் மூலம் பாய்ச்ச வசதி செய்யப்படும். இத்திட்டம் நிறைவேற ஒன்றரை லட்ச ரூபாய் செலவாகும். 14–5–55-ல் அரசாங்கம் இத்திட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளது. திட்டம் அதற்கென்று தனியாக நியமிக்கப்பட்ட பிரிவினரால் விரைவாக நடத்தப்பட்டு வருகிறது.

மேலே கூறப்பெற்ற திட்டங்களைத் தவிர அதிக உணவு உற்பத்திப் பெருக்குவதை முன்னிட்டு "சிறப்பு நீர்ப்பாசன திட்டங்கள்" விரிவாக ஆராயப்பெற்று திட்டங்களுக்கு ஆகும் செலவு விபரமும் கணக்கிடப்பட்டு வேலைகள் தொடங்க இருக்கின்றன.

மகாராஜ சமுத்திரம் ஆற்றிலே கட்டப்பட்ட அணைக்கட்டின் தோற்றம்:

1. மன்னார்குடி வட்டம் வடுவூர் கோதண்டராமசாமி ஏரியின் உள் பக்கத்தில் ஒரு பகுதியை ஆழமாக வெட்டி, வெட்டப்பட்ட மண்ணை பள்ளமான இடங்களில் போட்டு 100 ஏக்கர் நிலத்தை சாகுபடிக்குக்கொண்டு வர ரூ. 1,83,000 செலவில் ஒரு நிலச் சீரமைப்பு திட்டம் உருவாகி இருக்கிறது.

2. பாமணியார் கடைசியிலுள்ள தொப்பதான வெளி ரெகுலேட்டருக்கு ஐந்து கண்மாய்கள் சேர்க்க ரூ. 89,000 செலவில் ஒரு திட்டம் நிறைவேற இருக்கிறது.

3. மன்னார்குடி வட்டம் பேரையூர் எல்லையில் வி.யி. வாய்க்கால், வி.யி. நீர்க்கால் இவைகளின் குறுக்கே அணை

கட்டி ஆயக்கட்டில் சேர்ந்த நிலங்களைப் பாசனத்திற்குக் கொண்டுவர ரூ. 1,75,000 செலவில் ஒரு திட்டம் தொடங்கப் பெறும்.

" இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு " (737)

என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க ஒரு நாடு அமைதல் வேண்டும். தஞ்சை மாவட்டம் இவ்வுறுப்புகளுள்ளே ஆறுகளை மிகுதியாகப் பெற்றுள்ளது. ஒரு சில ஏரிகளும் ஆங்காங்கே உள்ளன. அன்னை காவிரி பல்லாண்டுகளாக தனது குழவிச் செல்வங்களைப் பேணி வருகிறாள்.

காவிரியின் கிளை நதிகளும் மிகப் பழமையுடையவை. கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்தே வளங்கொழித்துப் பாய்கின்றன. காவிரியின் நீர் ஆண்டிலே 60 சதவீதத் திற்கும் மேலாகப் பாசனத்திற்கும் மின்சார உற்பத்திக்கும் பயன்படுகிறது. இவ்வகையில் காவிரி ஆறு இந்திய ஆறு களுள்ளே முதன்மையுற்று விளங்குகின்றது.

மின்சாரம்.

கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதில் சென்னை மாநிலம் முதன்மையாய் விளங்குகிறது. ஐந்தாண்டுத் திட்டம் அமுலாக்கப்படுவதற்கு முன்னும், அத்திட்டம் அமுலாக்கப் பட்ட பின்னும் சென்னைமாநிலத்தில் எத்தனை கிராமங்களுக்கு மின்சாரம் தரப்பட்டுள்ளது என்ற விவரம் இதனைத் தெளி வுறுத்தும்.

ஆண்டு.	கிராமங்கள்.
1950–51	1,613.
1955–56	3,543.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடியுறும் கடைசி ஆண்டில் மட்டும் 870 கிராமங்களுக்கு மின்சாரம் தரப்பட்டுள்ளது.

கிராமங்களுக்கு மின்சாரம் தரப்படுவதன் முக்கிய நோக்கம் அம் மின்சாரம் உழவு தொடர்பான வேலைகளுக்கேப் பயன் படுத்தப்படவேண்டும் என்பதே. மின்சாரம் மூலம் சாகு படிக்கு வேண்டிய நீர் இறைக்கப்படுகிறது. அரசாங்கமே தனது நீர் இறைக்கும் பம்புகளைத் (pump sets) தந்து உதவு கிறது. ஐந்தாண்டுத் திட்டம் உருவாவதற்கு முன்னர் சென்னைமாநிலம் முழுதும் 1950-51-ல் 11,859 பம்புகளே வேலை செய்தன. திட்ட காலத்துக்குள் இந்த எண்ணிக்கை இரு மடங்குக்கும் மேலாகியது. 1955–56-ல் 27,631 பம்புகள் வேலை செய்தன. மின்சாரம் சிறு தொழில்களுக்கும் தரப்படுகிறது. அவ்விதம் 1950–51-ல் 1,556 சிறு தொழிற் சாலைகளுக்கு மின்சாரம் தரப்பட்டது. 1955–56-லோ 3,200 சிறு தொழிற்சாலைகளுக்குத் தரப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம், மாயூரம் முதலிய இடங்களுக்கு மின்சாரம் பற்றுக்குறை ஏற்பட்டதால் தஞ்சையிலிருந்து மாயூரத்திற்கு ஒரு புதிய மின்சாரக் கம்பித் தொடரை (line) சுமார் 12 லட்ச ரூபாய் செலவில் அரசாங்கம் போட்டது. கும்பகோணம், மாயூரம் முதலிய இடங்களில் புதிதாகக் கிளை மின்சார நிலையங்கள் நிறுவப்பட்டன. இதனால் கும்பகோணம், மாயூரம் ஆகிய இடங்களுக்கு மின்சாரம் குறைவின்றிக் கிடைத்து வருகிறது.

பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, அறந்தாங்கி ஆகிய வட்டங் களுக்குப் போதிய அளவு மின்சாரம் கிடைக்காததால் புதிதாக ஊர்களுக்கு மின்சாரம் தர இயலாமலிருந்தது. இதனைத் தஞ்சை மாவட்ட திட்டமிடும் குழுவினர் அரசாங்கத் திற்குத் தீர்மான வடிவில் எடுத்துரைத்தனர். அதன் பயனாக தஞ்சையிலிருந்து பட்டுக்கோட்டைக்கு சுமார் ஆறு லட்ச ரூபாய் செலவில் ஒரு K.V. மின்சாரக் கம்பித்தொடரை உடனடி யாகப்போட ஏற்பாடாகி வேலையும் மிக விரைவாக நடந்து

வருகிறது. இவ்வேலை முடிவுற்றபின் பட்டுக்கோட்டை, ஒரத்த நாடு, அறந்தாங்கி ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் பெருமளவில் கிடைக்கும்.

கடந்த ஐந்தாண்டுகளில் கும்பகோணம் மின்சாரம் தரு நிலையம் (Kumbakonam Electric Supply Corporation) 49 கிராமங்களுக்கும், தென் சென்னை மின்சாரம் நிலையம் 64 கிராமங்களுக்கும் புதிதாக மின்சாரம் தந்துள்ளன.



வடிமுனைக் குழாய்களின் மூலம் நீர் இறைத்தல்.

நிலம் . . .
கொழிக்க!

“ நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே ”

—புறநானூறு 187

நிலம் . . .

செழிக்க!

"சோழவளநாடு சோறுடைத்து"; "தென்னாட்டின் நெற்களஞ்சியம்" என்ற சிறப்புக்களைப் பெற்றது தஞ்சை மாவட்டம். இம் மாவட்டத்தில் வேளாண்மையே முதன்மையான தொழில்; மக்களுள் பெரும்பாலோர் இதனையே நம்பி வாழ்கின்றனர். காவிரி அன்னை தன் நீர்ப் பெருக்கால் விளைநிலங்களை எல்லாம் செழிக்கச் செய்து தனது மக்களைப் பாதுகாத்து வருகிறாள். இயற்கையிலே நல்ல வளமான நிலத்தையும், குறையாத நீரையும் பெற்று விளங்கும் இம்மாவட்டத்தில் உழவு முன்னேற்றமடைய மேலும் பல வசதிகளை அரசாங்கம் இவ்வைந்தாண்டுத் திட்டக் காலத்தில் செய்துள்ளது. அவற்றின் பயனாக உணவு உற்பத்தி பெரும் அளவில் பல்கி மிகுந்துள்ளது.

பிறநாடுகளைவிட நம் நாட்டிலே பெரும்பான்மையோர் உழவுத் தொழிலிலே ஈடுபட்டுள்ளனர். உழவுத் தொழில் மிக உயர்ந்த தொழில் என்று போற்றப்பெற்றது.

" உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் " (1033)

என்ற வள்ளுவர் வாய்மொழியே இதற்குச் சான்று. ஆனால் நாளடைவில் இத் தொழில் தன் சிறப்பை இழந்தது. நம் நாட்டு உழவர்கள் பண்டைய முறைகளையேக் கையாண்டு புதிய அறிவியல் முன்னேற்றத்தின் விளைவுகளை அறிந்திலர். புதிய சாதனங்களை வாங்குவதற்குப் போதுமான பணமும் அவர்களிடம் இல்லை. இவற்றையெல்லாம் மனதிற்கொண்டு, அரசாங்கம் உழவர்களுக்குப் பலவழிகளிலும் துணை புரிந்துள்ளது.

பொதுவாக இந்திய நாட்டில் உழவுத் தொழில் மிகப் பின் தங்கிய நிலையில் உள்ளமைக்குக் காரணம் தற்கால அறிவியல் உதவியைக்கொண்டு உழவு முன்னேற்றத்திற்கு வேண்டிய சாதனங்களையும் வழிமுறைகளையும் கடைபிடிக்காததே. இதைத் தெளிந்து 1880-ம் ஆண்டில் அமைக்கப்பட்ட பஞ்சக் குழுவின் (Famine Commission) வற்புறுத்தலின்பேரில் மாநிலங்களில் உழவுத் துறைகள் (Departments) பெயர் அளவில் ஏற்படுத்தப்பட்டன. அத்துறையின் முக்கிய வேலை களாவது :—

1. உழவு பற்றிய ஆராய்ச்சிகள் செய்வது.

2. உழவு முன்னேற்றத்திற்கு வேண்டிய புது வழிகளையும், புதிய சாதனங்களையும், நல்லவிதமான விதைகளையும், பலனுள்ள எருக்களையும் பற்றி உழவர்களுக்கு எடுத்துச் சொல்லுதல்.

3. உழவுக் கல்லூரிகளையும், பள்ளிகளையும் ஒழுங்காக நடத்துதல்.

4. இயற்கை எருவையும், செயற்கை எருவையும் நிலத்திற்கு உகந்தது எது, சேர்ப்பதற்கு ஏற்ற காலம் எது, பயிருக்கு உகந்தது எது என்று ஆராய்ச்சி செய்து முடிவுகளை மக்களுக்கு எடுத்துச்சொல்வது.

பூச்சிகளாலும் மற்றக் காரணங்களாலும் பயிர்களுக்கு ஏற்படும் நாசத்தைத் தடுக்கவேண்டிய சாதனங்களைக் கையாளும் முறையை உழுவுத்துறை அதிகாரிகள் உழவர்களுக்கு எடுத்துக்கூறினார்கள் ; கூறியும் வருகின்றனர். பலனுள்ள செழிப்பான விதைகளைச் சேகரித்துப் பயிரிடுவது, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கலப்பை, இயந்திர ஏர் (tractor), பலவித பயிர்களைக் கலந்து பயிரிடுதல் (mixed farming), வெவ்வேறு பயிர்களை மாற்றி மாற்றிப் பயிரிடுதல் முதலியவற்றில் கவனம் செலுத்தத் தூண்டினர். இவைகளைப் பிரசாரம் மூலமாகவும், மாதிரிப் பண்ணைகள் மூலமாகவும் மக்களுக்கு விளக்கிக் காட்டியுள்ளனர்.

உழவுத் துறையினர் ஆண்டுதோறும் மகசூல் போட்டிகளை (crop yield competition) ஏற்படுத்தி, பரிசுகளை வழங்கி மக்களிடையே அதிக உணவு உற்பத்தியைப் பெருக்கும் மனப்பான்மையை ஊக்குவித்து வந்தனர் ; வருகின்றனர். சென்ற 1950–51-ல் தஞ்சைப் பிரிவில் வடவூர் திரு. N. சாமிநாத அதியமார் அவர்கள் மாவட்டத்திலேயே மிகுதியான அளவில் கண்டுமுதல் செய்தமைக்காக அவருக்கு மாவட்ட, வட்டாரப் பரிசுகள் (District and Regional prizes) வழங்கப்பட்டன. அவர் ஓர் எக்கரிலே 10,852 ராத்தல் எடையுள்ள நெல் கண்டுமுதல் செய்திருந்தார். பட்டுக்கோட்டைப் பிரிவிலே பெருமகளூர் திரு. R. குழந்தைசாமித் தேவர் அவர்களுக்கு மாவட்டப் பரிசு வழங்கப்பட்டது. அவர் ஓர் எக்கர் நிலத்தில் 9,467 ராத்தல் எடையுள்ள நெல் கண்டுமுதல் செய்திருந்தார். 1951–52-ல் தஞ்சைப் பிரிவு ஐம்புகாச்சேரிகழி

திரு. சிங்கராஜ படையாச்சி அவர்களுக்கு மாவட்ட, வட்டாரப் பரிசுகளும், பட்டுக்கோட்டைப் பிரிவு மதுரசாபுரம் திரு. M. S. நாராயணசாமி அய்யர் அவர்களுகக்கு மாவட்டப் பரிசும், வழங்கப்பட்டன. அவர்கள் ஒவ்வொருவரும் ஓர் ஏக்கர் நிலத்தில் முறையே 8,886 ராத்தல், 7,644 ராத்தல் எடையுள்ள நெல் கண்டுமுதல் செய்திருந்தனர். 1952–53-ல் தஞ்சைப் பிரிவு அன்னவாசல் திரு. K. கோதண்டபாணி அவர்களுக்கும், பட்டுக்கோட்டைப் பிரிவு வெள்ளரிப்பைங்கா நாடு திரு. N. ராமச்சந்திரத் தேவர் அவர்களுக்கும் மாவட்டப் பரிசுகள் வழங்கப்பட்டன. அவர்கள் ஓர் ஏக்கர் நிலத்தில் முறையே 7,150 ராத்தல், 5.570 ராத்தல் எடையுள்ள நெல் கண்டுமுதல் செய்தனர். 1953–54-ம் ஆண்டில் தஞ்சைப் பிரிவு சீர்காழி முத்தையா முதலியார் அவர்களுக்கு மாவட்ட, வட்டாரப் பரிசுகளும், பட்டுக்கோட்டை பிரிவு கடம் பத்தான்குடி திரு. S. V. சுப்பையா அவர்களுக்கு மாவட்டப் பரிசும் வழங்கப்பட்டன. அவர்கள் ஓர் ஏக்கர் நிலத்தில் முறையே 7,995 ராத்தல், 7,125 ராத்தல் எடையுள்ள நெல் கண்டுமுதல் செய்தனர். 1954–55-ம் ஆண்டில் தஞ்சைப் பிரிவு விளாகம் திரு. சிவசுப்பிரமண்யப் பிள்ளை அவர்களுக்கும், பட்டுக்கோட்டைப் பிரிவு விளக்குடி திரு. V. சண்முகம் அவர்களுக்கும் மாவட்டப் பரிசுகள் வழங்கப்பட்டன. அவர்கள் ஓர் ஏக்கர் நிலத்தில் முறையே 6,875 ராத்தல், 5,185 ராத்தல் எடையுள்ள நெல் கண்டுமுதல் செய்தனர். மேற்கூறப்பட்ட பரிசுகளெல்லாம் தங்கப்பதக்கமாகவோ, வெள்ளிப் பதக்கமாகவோ, நற்சாட்சி இதழ்களாகவோ தரப் பட்டன. இதைத் தவிர புதிய முறைகளைப் பின்பற்றிச் சாகுபடி செய்தோருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

இம் மாவட்டத்தில் அதிக உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஏக்கராவிலும் சராசரி ஆண்டு விளைச்சலுக்கும்

அதிகமாக இரண்டு மூட்டை நெல் கிடைக்கச் செய்யவேண்டும் என்று பாபநாசம், கும்பகோணம், மாயூரம், சீர்காழி ஆகிய வட்டங்களில் (taluks) 16-5-55-ல் தேசீய வளர்ச்சித் திட்டம் கொண்டுவரப்பெற்றது. இத் திட்டம் நடைமுறையில் வந்த பிறகு உழவுத் துறையின் நிர்வாக வசதிக்காக மாவட்டத்தின் நான்கு பிரிவுகளான தஞ்சை, கும்பகோணம், மாயூரம், பட்டுக்கோட்டை ஆகிய நான்கு இடங்களிலும் உழவுத் துறை அதிகாரிகள் (District Agricultural Officers) நியமிக்கப் பட்டனர்.

அதிகாரி.	அதிகார எல்லை.
1. தஞ்சைப் பிரிவு அதிகாரி ..	தஞ்சை, மன்னார்குடி, நன்னிலம் வட்டங்கள்.
2. கும்பகோணம் ..	பாபநாசம், கும்பகோணம் வட்டங்கள்.
3. மாயூரம்	மாயூரம், சீர்காழி வட்டங்கள்.
4. பட்டுக்கோட்டை	பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, திருத்துறைப் பூண்டி வட்டங்கள்.

தஞ்சை மாவட்டத்தின் பரப்பளவு சுமார் 2,392,405 எக்கர்.

அதில்....

உணவுப் பொருள்கள் சாகுபடியாகும் நிலங்கள் 1,442,091 எக்கர்.

சாகுபடிக்கேற்ற ஆனால் சாகுபடி செய்யப்பெறாத நிலங்கள் 191,608, எக்கர்.

அதில்....

ஐந்தாண்டுத் திட்டபடி சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்ட நிலங்கள் 76,511 எக்கர்.

கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் மாவட்ட உழவுத் துறை அதிகாரிகளால் பல பணிகள் ஆற்றப்பட்டன.

மாவட்ட உழவுத் துறை அதிகாரி (District Agricultura Officer), தஞ்சைப் பிரிவு.—உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள்—

(1) பொறுக்குவிதை உபயோகித்தல்.

(2) மிகுதியான அளவில் உரமிடுதல்.

(3) பசுந்தாள் உரமிடுதல்.

(4) பூச்சிகளால் பயிர்களுக்கு ஏற்படும் நாசத்தைத் தடுத்தல்.

(5) நெல் பயிரிடப்பட்ட நிலங்களில் கோடைக் காலத்தில் பருத்திப் பயிரிடல்.

(6) ஜப்பானிய முறையில் சாகுபடி செய்யும் நிலப் பரப்பை மிகுதிப் படுத்தல்.

(7) வடிமுனைக் குழாய்கள் (Filter points) இறக்குதல்.

ஐந்தாண்டுத் திட்டக் காலத்தே . . .

17 டன் சீமை அகத்திவிதை உழவர்களுக்கு வழங்கப் பட்டது.

76 எண்ணெய்யால் ஓட்டப்படும் இயந்திரங்கள் கடன் முறையில் தரப்பட்டன.

150 வடிமுனைக் குழாய்கள் பல பகுதிகளிலும் இறக்கப் பட்டன.

170 மைல் நீளத்திற்கு சாலை ஓரங்களில் சீமைக் கருவேல முள் செடி விதைகள் ஊன்றப்பட்டன.

870 ஏக்கர் நிலத்தில் கிளிரிச்சீடியா செடிகள் நடப் பட்டன.

5,182 டன்கள் பொறுக்குவிதை வழங்கப்பட்டன.

13,984 டன்கள் ரசாயண உரம் வழங்கப்பட்டது.

20,316 ஏக்கர் நிலம் டிராக்டரினுல் உழப்பட்டது.

39,140 டன்கள் உணவுப் பொருள்கள் இவற்றின் பயனுக கண்டு முதல் செய்யப்பட்டது.

மாவட்ட உழவுத் துறை அதிகாரி (District Agricultural Officer), பட்டுக்கோட்டை—கடந்த ஐந்தாண்டுகளில் இப்பிரிவின் பல பகுதிகளிலும் 117 குழாய்க் கிணறுகள் இறக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் 1,170 ஏக்கர் நிலங்கள் நிலையான சாகுபடிக்குக் கொண்டுவரப்பெற்றன. இதற்காக ரூ. 2,77,292 கடனுக அளிக்கப் பெற்றது. கோடைகாலத்திலும் வருவாய் கிடைக்கும் பொருட்டு கடலை மிளகாய், பருத்தி, காய்கறி வகைகள் சாகுபடி செய்யப்பெற்றன; உர வழங்குத் திட்டத்தின் கீழ் 12,577 டன் அமோனியம் சல்பேட்டும், 3,595 டன் சூப்பர் பாஸ்பேட்டும் வழங்கப்பெற்றது. இதனுல் 29,260 டன் அளவுள்ள உணவுப்பொருள்கள் மிகுதியாகக் கண்டு முதல் செய்யப்பட்டது.

பொறுக்கு விதை வழங்கல்.—8,046 ஏக்கராவில் பொறுக்கு விதைப் பண்ணை நடத்தப்பட்டு 2,601 டன் பொறுக்கு நெல் விதை கொள்முதல் செய்யப்பட்டது. பொறுக்கு விதையின் பற்றுக்குறையை நீக்க வெளி மாவட்டங்களிலிருந்து 4,280 டன் விதை வரவழைக்கப்பட்டு உழவர்களுக்கு வழங்கப்பட்டது. இதனுல் 1,29,000 டன் உணவுப் பொருள்கள் அதிகமாக உற்பத்தியாகி உள்ளன.

பசுந் தழை உரம் வழங்கல்.—மிகுதியான அளவில் பசுந்தழையைப் பயிர்செய்து அதனை நிலங்களுக்குப் பயன்படுத்துவது சிறந்த முறையாகும். கடந்த ஐந்தாண்டுகளில் 721,598 ஏக்கர் நிலங்களில் பசுந்தழை பயிரிடுவதற்கு 3,206 மூட்டை (Sesbania) செஸ்பேனியா விதை வாங்கப்பட்டது.



செஸ்பேனியா பயிரிடல்.

பூச்சி பூஞ்சாள தடுப்புத் திட்டம்.—கடந்த ஐந்தாண்டுகளில் ரூ. 79,008-க்கு பூச்சிகளைக் கொல்லும் மருந்துகள் வாங்கப்பெற்று பாதிவிலைக்கு உழவர்களுக்கு வழங்கப்பட்டது. 44,460 ஏக்கர் நிலங்களில் தடுப்பு முறைகள் கையாளப்பட்டு ரூ. 98,616 மதிப்புள்ள உணவுப் பொருள்களும், மற்றப் பயிர்களும் காப்பாறறப்பட்டன.

ஜப்பானிய முறைச்சாகுபடி.—இம்முறை நல்ல பலன் அளிக்கும் முறையாகும். சாதாரணமான முறையில் பயிரிட்டால் ஒரு ஏக்கர் நிலத்தில் 1,600 ராத்தல் எடையுள்ள நெல்தான் கண்டுமுதல் செய்யமுடியும். இம் முறையில் சாகுபடி செய்தால் ஒரு ஏக்கர் நிலத்தில் 3,800 ராத்தல் எடையுள்ள நெல் கண்டு முதல் செய்ய முடியும். இந்த முறையை நமது நாட்டு நிலைக்கேற்றவாறு அமைத்திட

முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன. வட்டார மொழிகளில் பல வெளியீடுகளும் வெளியிட்டு இம்முறையை மக்களுக்கு எடுத்துச் சொல்ல ஆவன செய்யப்பட்டது. இம் முறையில் சாகுபடி செய்ய வேறு பல வசதிகளும் தேவைப்பட்டதால் அவையும் செய்து தரப்பட்டன.

இப்பிரிவில் 6,993 இடங்களில் இச்சாகுபடிமுறை செய்து காட்டப்பட்டது. 257,972 ஏக்கர் நிலத்தில் இம்முறைப்படி நெல் சாகுபடி செய்யப்பட்டது.

மாவட்ட உழவுத் துறை அதிகாரி (District Agricultural Officer), கும்பகோணம்—இப்பிரிவில் கடந்த ஐந்தாண்டு

ஜப்பானிய முறை நெல் சாகுபடி.

களிலே அரிய பல வேலைகள் செய்து முடிக்கப்பட்டன—

1	பொறுக்கு விதை வழங்கியது ..	158 டன்கள்.
2	பொறுக்கு விதையினால் சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பு ..	79,500 ஏக்கர்.
3	ஜப்பானிய முறைப்படி சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பு ..	220,754 ,,
4	ரசாயன எரு வழங்கியது ..	6,554 டன்கள்.
5	அதிக உணவு உற்பத்தி	9,872 ,,
6	பூச்சி தடுப்பு வேலை	20,000 ஏக்கர்.

மாவட்ட உழவுத்துறை அதிகாரி (District Agricultural Officer), மாயூரம்—இப்பிரிவில் தேசீய வளர்ச்சித் திட்டம் நடைமுறையில் வந்தபின் ஆற்றப்பெற்றுள்ள சாதனைகளையும் பணிகளையும் காணலாம்—

1	பொறுக்கு விதைகள் உற்பத்தி செய்யப்பட்ட நிலங்கள்	638 ஏக்கர்.
2	மேற்படி விதைகளின் உற்பத்திக்கு வழங்கப்பட்ட விதையின் அளவு	33 டன் 1,875 ராத்தல்.
3	நெல்விதை உற்பத்தி செய்யப்பட்டது	184 டன் 1,120 ராத்தல்.
4	ஊர்களில் உள்ள நெல்விதை உற்பத்திப் பண்ணைகளில் பொறுக்கு விதை உற்பத்தி செய்யப்பட்ட நில அளவு ..	5,710 ஏக்கர்.
5	உற்பத்தி செய்யப்பட்ட விதை அளவு.	161 டன்.

6 ஊர்களில் உற்பத்தி செய்யப்பட்ட
விதைகள் மாற்றிக்கொள்ளப்பட்ட
வகை .. .. .. 2,190 டன்.

எண்ணெய் வித்துக்கள்.

7 கடலை விதை வழங்கப்பட்டது .. 2 டன் 218 ராத்தல்.

8 அவை உற்பத்தி செய்யப்பட்ட
நில அளவு .. .. 71 ஏக்கர்.

பசுந் தழை உரம்.

9 செஸ்பேனியா பயிர் செய்யப்படட
நில அளவு .. .. .. 1,096 ஏக்கர்.

10 வரப்புகளில் பயிர் செய்யப்பட்டது. 267,604 ஏக்கர்.

11 நல்லரக பயிர் உற்பத்தி செய்யப்
பட்ட நில அளவு .. .. 9,158 ஏக்கர்.

12 விதைகள் வழங்கியது .. 74 டன் 1,281 ராத்தல்.

13 உற்பத்தி செய்யப்பட்ட விதைகள். 98 டன் 1,280 ராத்தல்.

கிளிரிஸிடியா.

14 வரப்புகளில் பயிரிடப்பட்ட நிலங்கள். 6,625 ஏக்கர்.

15 சீமை அகத்தி பயிரிடப்பட்ட நிலங்கள். 201 ஏக்கர்.

வேலிப்பயிர்களும் விறகுக்காகும் மரங்களும்.

16 விதைகள் வழங்கியது .. .. 1,842 ராத்தல்.

17 சாலை ஓரங்களிலும் ரயில்வே வழி
களிலும் பயிர் செய்யப்பட்டது .. 578 மைல்களுக்கு.

18 நிலப் பகுதிகளில் பயிர் செய்யப்
பட்டது .. .. .. 3,229 ஏக்கர்.

மரம் நடு விழா.

19 நடப்பட்ட கன்றுகள் .. .. 50,751.

பயிர்கள் நாசமாவதைத் தடுக்க.

20 பெஸ்டிஸைட்ஸ் வழங்கியது .. 17 டன் 2,887 ராத்தல்.

21 பாதுகாக்கப்பெற்ற நில அளவு .. 16,596 ஏக்கர்.

பழ மரங்களும் காய்கறிப் பயிர்களும்.

22 கன்றுகள் வழங்கியது 10,166

23 அவை நடப்பட்ட நில அளவு .. 422 ஏக்கர்.

24 காய்கறிப் பயிர் விதை வழங்கியது.. 287 ராத்தல்.

25 அவை பயிர் செய்யப்பெற்ற நில அளவு .. .. 310 ஏக்கர்.

26 புல்நாற்று வழங்கியது 7,300

27 புல் விதை வழங்கியது .. .. 25 ராத்தல்.

ரசாயன உரம் வழங்கியது.

28 அமோனியம் சல்பேட் .. .. 1,818 டன் 2,177 ராத்தல்.

29 சூப்பர் பாஸ்பேட் .. .. .. 377 டன் 1,099 ராத்தல்.

30 கம்போஸ்ட் .. .. 3,899 டன்.

31 டிராக்டரினால் உழப்பட்டநில அளவு. 1,546 ஏக்கர்.

32 புல்டோசரினால் சமன்படுத்தப்பட்ட நில அளவு .. .. .. 40 ஏக்கர்.

33 வாடகைக்கு விடப்பட்ட டிராக்டர்கள். 3.

34 வடிமுனைக் குழாய்கள் (Filter point)
இறக்கப்பட்டது 322

35 இயந்திரங்கள் வழங்கியது 93

36 மின் ஆற்றலால் இயங்கும் மோட்டார்
கள் (electric motors) வழங்கியது. 13

37 நீர் இறைக்கும் இயந்திரங்கள் வாங்க
கடன் தரப்பட்டது. .. .. ..ரூ. 3,09,804-7-3.

38 எண்ணெய்யால் ஓட்டப்படும் இயந்தி
ரங்கள் வாடகைக்குத் தரப்பட்டது
(oil engines).. 2

டிராக்டர்களினால் நிலத்தை உழுதல்.



39 அம்முறையில் நீர்ப்பாசனம் பெற்ற நிலம் .. .. .. 12 ஏக்கர்.

40 உரங்கள், விதைகள் வாங்க தக்காவிக் கடன் தரப்பட்டது .. .. ரூ. 94,270.

41 உழவுக்கருவிகள் வாங்க .. .. ரூ. 5,620.

42 மேலூர் இரும்புக் கலப்பைகளும் ஏர்க் கொழுக்களும் வழங்கியது (Melur ploughs and plough shares) .. 985.

43 செட்டூன்ஸ், புட்லர்ஸ் .. .. 150.

44 ஜப்பானிய முறைச் சாகுபடி செய்பவர். 119 பேர்.

45 செஸ்பேனியா, உழவுக் கருவிகள், பழச் செடிகள் போன்றவைகள் உதவித் தொகையின்கீழ் பாதி விலைக்குத்தரப் பட்டவகையில் .. ரூ. 7,591.

இப்பகுதியிலிருந்து 499 உழவர்கள் தேசீய வளர்ச்சித் திட்டப் பொருள் உதவியினால், அரசாங்கம் நடத்தும் உழவு ஆராய்ச்சிப் பண்ணைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அதன் மூலம் நல்ல பயனையும் அவர்கள் அடைந்தனர்.

உழவு ஆராய்ச்சிப் பண்ணை, ஆடுதுறை.

உழவு ஆராய்ச்சி, உழவிற்கு உயிர்நாடியாகும். உழவு ஆராய்ச்சியின் விளைவுகள் உழவர்களுக்குப் பேருதவியாக உள்ளன. தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறையில் மாநில அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ள உழவு ஆராய்ச்சிப் பண்ணை கடந்த பல ஆண்டுகளாகச் சிறந்த ஆராய்ச்சிகள் செய்து உதவி வந்துள்ளது. நல்ல விளைச்சலைக் கொடுக்கக் கூடிய பொறுக்கு விதைகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன. இப் பண்ணையில் தயாராகும் விதைகளையே இதுபோது தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு மாவட்டங்களில் பயன்



பர்மீஸ் செட்டுனிஞல் பரம்படித்தல்.

படுத்தப்பெறும் விதைகளுக்குப் பதிலாக பயன்பெறச் செய்வது அரசாங்கத்தின் நோக்கமாகும். அதோடு காவிரி கழிமுனைப் பரப்பிற்கு உகந்த புதிய முறைச் சாகுபடி முறைகளைக் கண்டுபிடிப்பது இப் பண்ணையின் குறிக் கோளாகும். 1952–53-ம் ஆண்டுகளில் இப் பண்ணையி லிருந்து குழாய்க் கிணறுகளின் உதவியினுலும், பசுந்தாள்

பட்டுக்கோட்டை உழவு ஆராய்ச்சிப் பண்ணையை முதலமைச்சர் பார்வையிடுகிறார்கள்.

ரசாயன உரத்தின் உதவியினாலும் பருவமழை பொய்த்திருந்தும் முந்திய ஆண்டுகளைவிட அதிக அளவு நெல் கண்டு முதல் செய்யப்பட்டு 208,842 ராத்தல் நெல் விதை வழங்கப்பட்டது. புதிய நெல் வகைகளாகிய A.D T. 24, A.D.T. 25 இவைகள் கண்டுபிடிக்கப்பட்டு தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டன. ஒரு எக்கர் நிலத்திலிருந்து 10 எக்கர் நிலத்திற்கு போடுவதற்குப் போதுமான 60,000 ராத்தல் சீமை அகத்தி பசுந்தாள் உரம் கிடைப்பதையும், கிளிரிசிடியா என்னும் செடி ஒன்றிலிருந்து ஓராண்டிற்கு 30 ராத்தல் பசுந்தாள் உரம் கிடைப்பதையும் தெளிவாக்கப்பட்டன.

பட்டுக்கோட்டை உழவு ஆராய்ச்சிப் பண்ணை.

இவ் வாராய்ச்சிப் பண்ணையில் 1952–53-ம் ஆண்டுகளில் பத்துவித குருவை விதைகளை ஆராய்ந்து ஆடுதுறை எண். 14 குருவை நெல் அதிக மகசூல் தருவதாகக் கண்டுபிடிக்கப்

பட்டது. இதுபோல் சம்பா நெல்லில் A.D.T. 8-ம், சி.ஓ.25-ம் அதிக மகசூல் தருவதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. கேழ்வரகில் அனகாபள்ளி எண். 1-ம், பானூர் எண். 1-ம், கோயமுத்தூர் எண். 3, எண். 2 இவைகள் ஆராயப்பட்டதில் அனகாபள்ளி எண். 1, ஒரு ஏக்கருக்கு 2,133 ராத்தல் மகசூலை அளித்தது. நிலக்கடலை திண்டிவனம் எண். 2-ம், கொட்டைமுத்து திண்டிவனம் எண். 3-ம் நல்ல மகசூலைக் கொடுத்தன.

சாத்தூர் மிளகாய் 5 செண்டு நிலத்தில் பயிரிடப்பட்டு 230 ராத்தல் 8 அவுன்ஸ் வற்றலும், 7,800 கன்றுகளும் விற்கப்பட்டன.

பழச்செடிகள் வகை,	தயாரிக்கப் பட்ட கன்றுகள்.	விற்கப் பட்டவை.	நடப் பட்டவை.
பலா	350	189	..
நேபாளி எலுமிச்சை ..	575	332	12
நாட்டு எலுமிச்சை ..	750	194	10
சிங்கப்பூர் பலா ..	64	12	5
சிட்ரன்	25	12	..
விதையில்லாக் கொய்யா.	..	..	2

உழவர்களுக்குக் கடன் உதவி செய்தல்

கடந்த ஐந்தாண்டுகளில் பல திட்டங்களின்கீழ் இம் மாவட்டத்தில் உழவர்களுக்குக் கடன் பட்டுவாடா செய்யப் பட்டுள்ளது. அதன் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

விபரம். (I)	1951–52. 2)	1952–53. (3)	1953–54. (4)
	ரூ.	ரூ.	ரூ.
உழவுக் கருவிகள் வாங்க.	500	945	310
ரசாயன உரம் வாங்க.	10,64,250	10,02,905	16,23,490
பொறுக்கு விதை உரம் வாங்க.	2 84,930	3,32,489	1,37,070
தக்காவிக் கடன்கள்.	3,86,580	7,56,160	12,67,565